[28th July 1965

(*a*) Expenditure incurred by the Harijan Welfare Department towards purchase of books to Harijan and Backward class pupils in 1964 is given below :—

		RS.	P
1	Chingleput	22,307	98
2	Coimbatore	2,014	89
3	Madurai	16,570	80
4	The Nilgiris	5,999	38
5	North Arcot	33,961	27
6	Ramanathapuram	4,772	22
7	Salem	11,028	72
8	South Arcot	31,379	67
9	Tirunelveli	1,670	62
10	Tiruchirapalli	42,700	36
11	Thanjavur	31,443	25
12	Madras City	6,944	82
13	Kanyakumari	Nil.	
	Total	2,10,793	98

(*b*) Yes.

அரிசி ஆலைகள்

8—

கேள்வி—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள அரிசி அரைத்து விற்பனை செய்யும் பெரிய ஆலைகள் எத்தனை ? (மாவட்டவாரியாக)

(இ) தனியார் வசம் எத்தனை ? பொதுத்துறை அல்லது கூட்டுறவுத் துறையில் எத்தனை ?

(உ) தமிழகத்தில் நெல் அரைத்துக் கொடுக்கும் சாதாரண அரைவை ஆலைகள் மாவட்ட வாரியாக எத்தனை ?

(எ) எத்தனை இடங்களில் கைக்குத்தலரிசி தொழிற்கூடங்கள் உள்ளன ?

Answer—

(*a*) to (*d*) A statement [a] is appended.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III.—ADJOURNMENT MOTION.

PROCUREMENT OF PADDY IN ERODE AREA AGAINST RULES.

MR. SPEAKER : The hon. Member Sri K. R. Nallasivam has given notice of an adjournment motion under Rule 42. In this connection, I wish to make certain general observations. Before I do so, I shall first read the motion given notice of by the hon. Member.

"கோவை மாவட்டம் ஈரோடு பகுதியில் விதி முறைக்கு மாறான முறையில் நெல் கொள்முதல் ஏழை எளிய விவசாயிகளிடம் செய்வதால் ஏற்பட்டுள்ள அவசர நிலைமை"

[a] **Printed as Appendix II on page 216**

28th July 1965] [Mr. Speaker]

It is so short. Nowadays, notice of adjournment motions are becoming very short. A mere reading of this motion does not make out anything urgent. Something more explanatory is obviously required. Probably because the hon. Member has considered it as an urgent matter, it has prepared in an 'urgent' manner!

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, even reading from the text of the motion would mean some propaganda to which I will have to offer explanation.

MR. SPEAKER : Very well.

திரு. க. ர. நல்லசிவம் : நான் அதை விளம்பரப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கொடுத்தது அல்ல.

MR. SPEAKER : The hon. Member may please come to the point.

திரு. க. ர. நல்லசிவம் : கனம் சபாநாயகர் அவர்களே, எங்களுடைய ஜில்லாவில் அறுவடையாகி நான்கு மாதங்கள் ஆகின்றன. சர்க்கார் கொள்முதல் செய்வது என்று சொன்னால் அறுவடை ஆன ஒரு மாதம் அல்லது இரண்டு மாத காலத்தில் செய்வது நியாயமானது. அறுவடையாகி நான்கு மாதங்களுக்குப் பிறகு சர்க்கார் விதி முறைகளுக்கு விரோதமாக, ஒரு ஏக்கருக்குக் கீழே உள்ளவர்களிடமிருந்து வசூல் செய்யக்கூடாது, ஒரு ஏக்கரிலிருந்து மூன்று ஏக்கர் வரை இவ்வளவு வசூல் செய்யவேண்டும், 3 ஏக்கரிலிருந்து 5 ஏக்கர் வரை இவ்வளவு, 5 ஏக்கரில் இருந்து 10 ஏக்கர் வரை இவ்வளவு என்று வரையறை செய்திருந்தும் அந்த வரையறைக்கு மாறாக தற்போது ஈரோடு தாலுகாவில் அதிகாரிகள் தங்கள் மனம் போன போக்கில் வீடுகளில் புகுந்து, அங்கு சாப்பாட்டுக்காக வைத்திருக்கக் கூடிய நெல்லையெல்லாம் எடுத்துக் கொண்டு விடுகிறார்கள். சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பே அவர்கள் சர்க்கார் விதி முறைப்படி நெல்லைக் கொடுத்து விட்டார்கள். இப்பொழுது யார் கொடுத்தார்கள் என்ற கணக்கு வழக்கு எதுவும் இல்லாமல் வீடு தோறும் புகுந்து நெல்லை எடுத்துக் கொள்கிறார்கள். குறிப்பாக, சவரத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், ஹரிஜனங்கள் ஆகியவர்களுடைய வீடுகளில் புகுந்து நெல்லைக் கொள்முதல் செய்கிறார்கள். இதனால் ஈரோடு தாலுகா விவசாயிகளிடம் மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு சட்ட விரோதமாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதைப்பற்றி இந்தச் சபையில் விவாதிக்க கனம் சபாநாயகர் அவர்கள் இந்தச் சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே ஒத்தி வைப்புப் பிரேரணை என்றால் 'ஆன் எ டெஃபனெட் மாட்டர் ஆஃப் பப்ளிக் இம்பார்ட்டன்ஸ்' என்று இருக்கவேண்டும். அதற்கு முற்றிலும் புறம்பாக கனம் அங்கத்தினர் அவர்கள் கொடுத்துள்ள மோஷன் இருக்கிறது. இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல. இது நிர்வாகத் துறையில் நடந்த தவறுதலாக இருந்தால், இன்ன தவறுதல் நடக்கிறது என்று கேள்வி மூலமாகவோ

[திரு. எம். பக்தவத்சலம்] [28th July 1965

அல்லது வேறு வகையிலோ அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம். பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்திருக்கலாம். அப்படி யாரும் இதுவரை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் 'விதி முறைகளுக்கு விரோதமாக' என்று சொன்னார்கள். இதற்கு 'விதிகள்' என்று ஒன்றும் போடவில்லை. ஆங்காங்கு இருக்கிற கலெக்டர்கள் விவசாயிகளோடு கலந்து ஆலோசித்து கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்கிறார்கள். கொள்முதல் செய்வதன் அடிப்படை என்னவென்றால் எவ்வளவு தூரம் அவர்களால் விற்கக் கூடுமோ அவற்றைக் கொள்முதல் செய்யவேண்டும். சிறிய விவசாயிகளாக இருக்கலாம், ஏழை விவசாயிகளாக இருக்கலாம், எளிய விவசாயிகளாக இருக்கலாம், அவர்களுக்கு அரிசி மாத்திரம் போதாது. மற்றத் தேவைகளும் இருக்கின்றன. அவர்கள் விற்கக் கூடிய நெல்லுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறோம். அந்த விலைக்கு மேல் விற்கக்கூடாது. வேறு யாருக்கும் விற்பதை, வியாபாரிகளிடத்தில் விற்பதை, அரசாங்கத்திடம் கொடுங்கள் என்ற முறையில்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. ஏழைகளிடம் வாங்குகிறார்கள், சிறிய விவசாயிகளிடமிருந்து வாங்குகிறார்கள் என்று சொல்வதற்கு அடிப்படை இல்லை. சாப்பாட்டுக்கு வைத்திருக்கும் நெல்லை வற்புறுத்திக் கேட்டால் அது தவறுதான். அதைப்பற்றிக் குறிப்பாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும். இப்போது பலருக்கு அதிக விலைக்கு விற்க வேண்டுமென்ற நினைப்பு இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த கனம் அங்கத்தினர்கள் ஒத்துழைக்க வேண்டும். மற்றவர்களுக்கு விற்கக் கூடிய நெல்லை அரசாங்கத்திற்குக் கொடுப்பதுதான் நியாயம். ஆகவே, சமீபத்திலே குறிப்பாக நடந்த ஒன்றைக் குறிப்பிடவில்லையாதலால் இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உரியதல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: I hold that this matter does not come under Rule 42 and hence, I withhold my consent to it.

IV.—PRIVILEGE MATTER.

SPEECH MADE BY THE MINISTER FOR INEUSTRIES AT A PUBLIC MEETING.

MR. SPEAKER: The hon. Member Sri T. P. Alagamuthu has given notice of a matter of privilege on a speech made by the Hon. Minister for Industries at a public meeting.

*திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, கடந்த 16-4-1965-ம் தேதி சத்தியமூர்த்தி பவனில் ஒரு பொதுக் கூட்டத்தில் கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள் பேசும் போது—

"Referring to the debates and discussions in the Legislature he said that some Opposition party members did not study the connected papers or the Budget or other legislation with proper care and attention, but criticised at random without relevance to the subject, nor did they give facts and figures to support their statements."